செய்தி மக்கள் தொடர்பு துறை
வெளியீடு எண்: 17 / நாள்: 23/3/18

வேலூர் மாவட்டம்

## செய்திக் குறிப்பு

மாவட்டக் கருவூலங்கள் மற்றும் சார் கருவூலங்கள் மூலம் ஓய்வூதியம் பெறும் தமிழக அரசு ஓய்வூதியர்கள்/குடும்ப ஓய்வூதியர்கள் இந்த ஆண்டு ஏப்ரல் 2018 மாதம் முதல் ஜுன் 2018 மாதம் வரை நேர்காணலுக்கு ஆஜராகி பதிவு செய்ய வேலை நாட்களில் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஜீவன் பிரமான் வாழ்வு சான்றிதழ் திட்டம் மூலம் தமிழக அரசு ஓய்வூதியர்கள்/குடும்ப ஓய்வூதியர்கள் சம்மந்தப்பட்ட கருவூலங்களுக்கு செல்லாமலேயே அரசு இ- சேவை மையங்கள் வழியாக நேர்காணலை இணையதளத்தில் **(www.jeevanpramaan.gov.in)** ஆதார் அட்டை வாயிலாக பதிவு செய்து அதன் மூலம் நேர்காணல் செய்ய கடந்தாண்டு முதல் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 1) நேரில் வருபவர்கள்:

இதுவரை ஆதார் அட்டை வருமான வரி கணக்கு எண் (PAN CARD A/C NO) குடும்ப அடையாள அட்டை(Ration Card) மற்றும் நடைமுறையில் உள்ள சேமிப்பு கணக்கு எண் (Core Banking Account Number) வங்கி வரவு புத்தகம் சமர்ப்பிக்காத ஓய்வூதியர்கள் மேற்படி ஆவணங்களின் நகல்களுடனும் தங்களின் ஓய்வூதிய கொடுவை எண்ணை (PPO NO) குறிப்பிட்டு கருவூலத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஓய்வூதியர்கள் நேர்காணலுக்கு வரும்போது ஓய்வூதிய புத்தகம் கொண்டு வரவேண்டும்.

### 2) நேரில் வர இயலாத ஓய்வூதியர்கள் :

**அ) நேரில் வர இயலாத ஓய்வூதியர்கள்** ஓய்வூதியப் புத்தகம் இதுவரை ஆதார் அட்டை வருமான வரி கணக்கு எண் (PAN CARD A/C NO) குடும்ப அடையாள அட்டை(Ration Card) மற்றும் நடைமுறையில் உள்ள சேமிப்பு கணக்கு எண் (Core Banking Account Number) வங்கி வரவு புத்தகம் சமர்ப்பிக்கவில்லை எனில் அதன் நகல் ஆவணங்களுடன் வாழ்வு சான்றினை (Life Certificate) உரிய படிவத்தில் ஓய்வூதியம் வழங்கும் கருவூலத்திற்கு அனுப்பப்படவேண்டும். வாழ்வு சான்றினை (Life Certificate) **(www.tn.gov.inkaruvoolam)** என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அத்தகைய வாழ்வுச்சான்று படிவத்தினை.

- ஓய்வூதிய வங்கிக் கணக்கு உள்ள கிளை மேலாளர் (அல்லது)

- அரசிதழ் பதிவு பெற்ற மாநில மற்றும் மத்திய அரசு அலுவலர் (அல்லது)
- வட்டாட்சியர் / துணை வட்டாட்சியர் (அல்லது) வருவாய் ஆய்வாளர் ஆகியோரிடம் சான்றோப்பம் பெற்று அனுப்ப வேண்டும்.

அனைத்து நகல்களிலும் ஓய்வூதியர்கள் தங்களின் ஓய்வூதிய கொடுவை எண்ணை (PPO NO) குறிப்பிட்டு ஓய்வூதியம் பெறும் அலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆ) **<u>வெளிநாட்டில் வசிக்கும் ஓய்வூதியர்கள் :</u>**

வெளிநாட்டிலுள்ள மாஜிஸ்டிரெட், நோட்டரி, வங்கி மேலாளர் அல்லது இந்திய தூதரக அலுவலரிடம் வாழ்வுச்சான்று (Life Certificate) பெற்று சம்மந்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். ஓய்வூதியப் புத்தகம் இதுவரை ஆதார் அட்டை வருமான வரி கணக்கு எண் (PAN CARD A/C NO) குடும்ப அடையாள அட்டை(Ration Card) மற்றும் நடைமுறையில் உள்ள சேமிப்பு கணக்கு எண் (Core Banking Account Number) வங்கி வரவு புத்தகம் சமர்ப்பிக்கவில்லை எனில் அதன் நகல் ஆவணங்களுடன் வாழ்வு சான்றினை (Life Certificate) உரிய படிவத்தில் ஓய்வூதியம் வழங்கும் கருவூலத்திற்கு அனுப்பப்படவேண்டும். வாழ்வு சான்றினை (Life Certificate) (**<u>www.tn.gov.inkaruvoolam)</u>** என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஓய்வூதியகள் தங்களது ஆதார் எண்ணை கருவூலத்தில் பதிவு செய்து இணையதள வழி சேவையை பயன்படுத்திக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தற்போது 'jeevan praman' **<u>(www.javanpramaan.gov.in)</u>** என்ற இணையதள வழியாக ஆதார் எண் பதிவு செய்யப்பட்டு ஓய்வூதியர் தங்களது வாழ்வுச்சான்றினை இணையதளம் மூலமாகவேபதிவு செய்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டில் வாழும் தமிழக அரசு ஓய்வூதியர்கள்/குடும்ப ஓய்வூதியர்களும் ஆதார் எண் பெற்று கருவூலத்திலும் jeevan praman portal-லும் பதிவு செய்திருந்தால் வாழ்வு சான்றை இணையதளம் மூலமே பெற்றுக்கொள்ளலாம்.

**<u>3) மற்ற விபரங்கள்:</u>**

குடும்ப ஓய்வூதியர்கள் நேரில் வருபவர்கள் /நேரில் வர இயலாத ஓய்வூதியர்கள் மறுமணம் புரியவில்லை என்பதற்கான உறுதிமொழியினை சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஓய்வூதியர்கள் தற்போதைய இருப்பிட முகவரி, கைபேசி எண், மின்னஞ்சல் முகவரி (இருப்பின்) ஆகிய விபரங்களையும் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

4) **ஓய்வூதியம் நிறுத்தம்:**

ஓய்வூதியர்கள் இந்த ஆண்டு ஏப்ரல் 2018 மாதம் முதல் ஜுன் 2018 மாதம் வரை நேர்காணலுக்கு வரத் தவறினாலோ அல்லது சான்றோப்பம் செய்யப்பட்ட (Life Certificate) வாழ்வுச்சான்றினை அனுப்பத் தவறினாலோ ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் ஆகஸ்டு 2018 மாதம் முதல் நிறுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

1) **இணையதள முகவரி:**

வாழ்வு சான்றினை (Life Certificate) **(www.tn.gov.inkaruvoolam)** என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

2) **புதிய ஓய்வூதியர் மருத்துவ காப்பிட்டு திட்டம்:**

இதுவரை ஓய்வூதியர் மருத்துவ காப்பிட்டு திட்டத்தில் விண்ணப்பம் அளிக்காதவர்கள் கருவூலத்தில் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

குறிப்பு:

தமிழ்நாடு மின்வாரியம், ரயில்வே, அஞ்சல்துறை, தொழிலாளர் வைப்பு நிதித்திட்டம் மத்திய அரசு ஓய்வூதியர்கள் உள்ளாட்சி மன்ற ஓய்வூதியர்களுக்கு இந்த அறிவிப்பு பொருந்தாது என தெரிவிக்கப்படுகிறது.

கருவூல அலுவலர்,
வேலூர்.

செ.ம.மே.அ.
வேலூர்- 9.